பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 | ஐப்பசி 30 | முஹர்றம் 6 | இதழ் 276
யாழ்ப்பாண | சனிக்கிழமை | 15 - 11 - 80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1980 -11- 15
PERIODICALS DIVISION
LIBRARY

தரத்தினில் சிறந்த
மான் - முயல்
வரிக்குதிரை
யானை - விளக்கு
சந்திரிக்கா - பூ
புலிமார்க் ஓடுகளையே
பாவியுங்கள்
மு. நா. பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

### தனிச்சிங்களத்தில் படிவங்கள்

(புளியங்குளம்)

க. பொ. த. சாதாரண பரீட்சைகளுக்கான விடைத்தாள் மதிப்பீட்டாளர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பப்படிவங்களும் அறிவுறுத்தல்களும் தனிச்சிங்கள மொழியிலேயே பரீட்சை ஆணையாளர் திரு. குணபால விக்கிரமரத்னவினால் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. இதனால் பாடசாலை ஆசிரியர்கள் விண்ணப்பப்படிவங்களை எவ்வாறு பூர்த்திசெய்வ

(8-ம் பக்கம் பார்க்க)

### கூட்டணிக்கு கிடைத்த ஆணையில் சந்தேகமா?

# தமிழர் கருத்தை அறிவதற்கு வாக்கெடுப்பை நடத்துங்கள்

## பிரச்னைகளைத்தீர்த்துவைக்க இதுவே சிறந்த வழியாகும்'

### சபையில் கோப்பாய் எம். பி. கருத்து

(கொழும்பு)

"தமிழ் மக்கள் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு வழங்கியுள்ள ஆணையில் அரசுக்குச் சந்தேகமிருக்குமானல் ராஜாங்க அமைச்சர் கூறியிருப்பது போல் தமிழ் மக்கள் மத்தியில் வாக்கெடுப்பு ஒன்றை நடத்திப் பார்க்கலாம். தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கு இதுவே சிறந்த வழியாகும்".

இவ்வாறு கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை நேற்று பாராளுமன்றத்தில் வரவுசெலவுத் திட்ட உரையின்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினர்.

"தமிழ்மக்கள் மத்தியில் கருத்துக் கணிப்பொன்றை நடத்தி அவர்களின் கருத்தை அறிவதன் மூலமே தமிழ்மக்களின் பிரச்னையை வெளிநாட்டுத் தலையீடின்றிச் சுலபமாகத் தீர்க்கலாம், இதைக்கேட்டு நீங்கள் இப்பொழுது சிரிக்கக் கூடும். ஆனல் வெளிநாட்டுத் தலையீட்டுடன் இப்பிரச்னை தீர்க்கப்படும்பொழுது நீங்கள் அழவேண்டிய நிலைமையும் ஏற்படலாம்" என்று திரு. கதிரவேலுப்பிள்ளை குறிப்பிட்டார்.

சிங்கள மக்களுக்காக சிங்கள அரசாங்கம் செய்ய விரும்புவதுபற்றி நாம் சண்டையிட விரும்பவில்லை. தமிழ்மக்கள் எங்களுக்கு ஒரு ஆணையைத் தந்திருக்கிறர்கள். இதுதொடர்பான பிரச்னை தீர்க்கப்படாதவரை அரசியல் ஸ்திரம் நிலவ முடியாது" என்றுகூறிய திரு.கதிரவேலுப்பிள்ளை "ஈழத்தில் இப்பொழுதுராணுவமுற்றுகைஏற்பட்டுள்ளது. அரசாங்கஅதிபர் மாவட்ட அமைச்சர் ஆகியவர்களின் வாசஸ்தலங்களில் இராணுவம் நிலைகொண்டுள்ளது" என்ருர். அவர் தொடர்ந்து பேசுகையில்:

#### ஆயுதப்படையால் கொலையுண்டனர்

"நீங்கள் பதவிக்கு வந்தது முதல் எத்தனை தமிழர்கள் ஆயுதப்படைகளினுல் கொலை செய்யப்பட்டிருக்கிருர்கள்?. தமிழர் விடுதலைக் கூட்டணி காந்திய வழியில் அகிம்சைக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் கட்சி, இதனை ராணுவத்தினர் தங்களுக்குச்சாதகமாகப் [illegible] என்ருர் திரு. கதிரவேலுப்பிள்ளை மேலும் பேசுகையில் இப்பொழுது இந்த நாட்டில் நடைபெறுவது ஒரு கட்சி ஆட்சியல்ல ஒரு மனிதன் ஆட்சி.

#### துப்பாக்கி முனையில் அரசியல் ஸ்திரம் நிலைபெருது

"நீங்கள் வெளிநாட்டிலிருந்து கடனுகப்பணம் பெறுவதற்காக இங்கு அரசியல் ஸ்திரம் நிலவுவதாகக் காட்டப் பார்க்கிறீர்கள். ஆனல் துப்பாக்கி முனையில் அரசியல் ஸ்திரத்தை நிலைநாட்ட முடியாது ராணுவ பலத்தால் முடியாது அரசியல் எதிரிகளின் குடியியல் உரிமைகளைப் பறிப்பதாலும் முடியாது.

(8-ம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத்தில் எம். டி. எச் கூறிய கனவுக்கதை!

(கொழும்பு)

"டெல்வெதொகுதி பாராளுமன்ற உறுப்பினரும், முன்னுள் பெருந்தோட்டத்தொழில் அமைச்சருமான திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன பாராளுமன்றத்தில் பட்ஜட் விவாதத்தில் பேசுகையில் தான் அண்மையில் கண்ட 'கனவு' ஒன்று பற்றிக் கூறினுர்.

திறைசேரிச் செயலாளர் திரு டபிள்யூ. என். திலகரத்னவும் உதவிச் செயலாளர் திரு. ரி. சண்முகமும் நாட்டுக்குப் பெரிய துரோகம் செய்துவிட்டதாகவும், நாட்டின் நிதியிலிருந்து பெரும் பகுதிப் பணத்தை பந்தாடியிருக்கிறர்கள் என்று யோசித்தவாறு தாம் நித்திரை செய்தபோது கனவு கண்டதாகவும் கூறிய அவர், அதனைச் சபையில் பிரஸ்தாபித்தார்.

"திருவாளர்கள் திலகரத்தின, சண்முகம் ஆகியோரை வேலையிலிருந்து நீக்கலாமா என்று யோசித்தேன். அப்படி அவர்களை நீக்கினல் திரு. திலகரத்தின அடுத்த தேர்தலில் மஹரகம தொகுதியில் போட்டியிட்டு எம். பி. யாகிவிடுவார். திரு. சண்முகம் வேறு நிதி நிறுவனத்தில் சேர்ந்து கூளைகளையாக பணம் சம்பாதித்து விடுவார். எனவே இவர்களை வேலையிலிருந்து நீக்காமல் விசேட ஜனதிபதி ஆணைக்குழு முன்னிலையில் நிறுத்துவதென்று தீர்மானித்தேன்.

"உடனே இருவரும், தம்மை விசாரிக்க நீதிபதிகளுக்கு அதிகாரமில்லை என்று உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்கள்.

"நீதிபதிகள் சம்பள உயர்வு கோரியபோது தமது திறைசேரிமறுத்ததாலும் நீதிபதிகள் ஓய்வுபெறும்வயதை 60லிருந்து 65 ஆக உயர்த்துமாறு கேட்டபோதும் தமது திறைசேரி மறுத்ததென்றும், இதனுல் தம்மீது கமிஷன் உறுப்பினர் ஆத்திரம் கொண்டிருப்பதால் அவர்களை விசா

(8-ம் பக்கம் பார்க்க)

### அமரர் நாகலிங்கத்தின் பூதவுடல்

## சுன்னுகம் நவீன சந்தையில் அஞ்சலிக்காக வைக்கப்படும்

### இறுதிக்கிரியைகள் இன்றுநடைபெறும்

(யாழ்ப்பாணம்)

முன்னுள் செனட்டரும் லங்கா சமசமாஜக் கட்சியின் வடபிரதேச ஸ்தாபகருமான அமரர் பொன் நாகலிங்கத்தின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் சுன்னுகத்தில் நடைபெறவுள்ளது.

சுன்னுகம் பட்டினசபைத் தலைவராக இவர் பதவிவகித்த காலத்தில் இவரால்உருவாக்கப்பட்ட சுன்னுகம் நவீன சந்தை கட்டிடத்தில் அமரரின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக இன்று காலை 10 மணிக்கு வைக்கப்படும்.

அமரரின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காகக் குடாவின் பல பாகங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் நேற்று அவரது வாசஸ்தலத்திருச் சென்றனர். இன்றும் பெருந்திரளான மக்கள் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (கு)

## மாவட்ட அபிவிருத்திச் சபைத்தேர்தலில் தமிழ்க்காங்கிரஸ் போட்டியிடுமா?

### இன்றைய மாநாட்டில் முடிவுதெரியும்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலில் தமிழ்க்காங்கிரஸ் போட்டியிடுவதா? இல்லையா? என்பது பற்றி இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும், தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர்கள் மாநாட்டில் இறுதி முடிவு எடுக்கப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்ககாங்கிரஸ் தலைமைக் காரியாலயத்தில் இன்று காலை உறுப்பினர் மாநாடு ஆரம்பமாகும்.

மாவட்ட சபைத் தேர்தலில் தமிழ்க்காங்கிரஸ் போட்டியிடுவதென்று தமிழ்க்காங்கிரஸ் செயற்குழு ஏற்கனவே தீர்மானித்திருந்தது. இவ்விடயத்தை தமிழ்க்காங்கிரஸ் பொதுச்சபையே தீர்மானிக்க வேண்டும் என்று தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணியினர் தலைமைப்பீடத்திடம் வலியுறுத்தியிருந்தனர். இதைத் தொடர்ந்து இன்று நடைபெறும் உறுப்பினர் மாநாட்டில் இறுதி முடிவு எடுக்கப்படவிருக்கிறது.

கடந்த காலத்தில் தொகுதி ரீதியாக செய்யப்பட்டுவந்த கிளைகளை, புதிய விகிதாசார தேர்தல்முறை அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு ஒரு கிளை அமைப்பது பற்றியும், இன்றைய மாநாட்டில் பரிசீலனை செய்யப்படவிருக்கிறது.

வடக்கு, கிழக்கிலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து பொதுச் சபைக்கு இருவர் அல்லது மூவர் தெரிவு [illegible] மாநாட்டில் [illegible]படும். (க)

## விவசாயிகள் எச்சரிக்கை!

(புளியங்குளம்)

நெடுங்கேணி, ஒட்டுசுட்டான் கிராமப் பகுதிகளில் ஒருசில வாலிபர்கள் கிராமங்களுக்கு வாடகைக்காரில் போலிக் கிருமிநாசினிகளை எடுத்துச் சென்று விற்பனை செய்து விவசாயிகளை ஏமாற்றி வருகிருர்கள்.

இவர்கள் பிளாஸ்டிக் போத்தல்களில் மலக்கியோன் பவுடரையும் வேறு ஒருசில இரசாயனச் சேர்க்கைகளையும் கலந்து கிருமிநாசினியெனக்கூறி விற்பனை செய்து வருவதாகத் தெரியவருகிறது. இது தொடர்பாக இப்பகுதிப் பொதுமக்கள் நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் திரு. சின்னையா பாலசுந்தர திடம்முறையீடு செய்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வசதியான வீடு வாடகைக்குத் தேவை தனி வீடு விரும்பத்தக்கது. இடம், வாடகை, முற்பணம் பற்றிய விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். டி. சாமுவேல், திருப்பதி ஹோட்டல், தாவடிச் சந்தி, கொக்குவில். 7313

## கல்வி

உள், வெளிநாடுகளில் மின்சாரவேலை—தமிழ் 7-ம் வகுப்பு படித்திருந்தால் ஆறுவாரங்களில் எலெக்றிஷன்(Electrician) டிப்புளோமா—Jaffna Technical School, 53, (30) டேவிற் வீதி, குருநகர், யாழ்ப்பாணம். 7350

## தவறிவிட்டது

13—11—80 அன்று எனது டிரைவிங் லைசன்ஸ், இன்சூறன்ஸ், Tax, உத்தியோக அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை முதலியன தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒன்றிற்கு தபாலில் அனுப்பவும். த. குகதாசன், 15 கே ணைமலை ஒழுங்கை, கொக்குவில், த குகதாசன், விலைமதிப்புத் திணைக்களம், தேசிய வீடமைப்பு திணைக்களச்செயலகம், யாழ்ப்பாணம். 7360

## விற்பனைக்கு

D. L. லம்பிறற்ரு இத்தாலி ஸ்கூட்டர் 6 ஸ்ரீ விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளும் முகவரி: பாலா ஸ்கூட்டர் வேக்ஸ், 140, நாச்சிமார் கோவிலடி, சிவப்பிரகாசம் ரோட், யாழ்ப்பாணம். 7342

## விற்பனைக்கு

முட்டைகளுக்கென தெரிவு செய்யப்பட்ட உயர்ந்த இன சிவப்பு முட்டையிடும் கறுப்பு 1½ மாத பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு K. அழகராஜா, நிம்மி கோழிப்பண்ணை 30/1 காட்டுக் கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 7326

யாழ்ப்பாணம் பீச் ரோட்டில் மூன்று பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி ஜோன்சன், 171, குருசோ வீதி, சுண்டுக்குளி. 7362

நாடக அரங்கக் கல்லூரி
ரசிகர் அவைக்காக தயாரித்தளிக்கும்
சி. மௌனகுருவின்
"சங்காரம்"
✯ 15-11-1980 சனிக்கிழமை
✯ மாலை 6-45 மணி
✯ வீரசிங்கம் மண்டபம்
✯ பிரவேசம் ரூபா 5, 3
ரசிகர் அவை உறுப்பினர்களுக்கு இலவசம் 7325

## கிஸிங்கர் பேச்சுவார்த்தை

வாஷிங்டன், நவ. 14

அமெரிக்காவின் முன்னாள் வெளிநாட்டமைச்சர் கலாநிதி ஹென்றி கிஸிங்கர் நமீபியாவின் சுதந்திரப் பிரச்னை குறித்து தென்னாபிரிக்காவின் வெளிநாட்டமைச்சர் திரு. பீக்போத்தாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக லிஸ்பன் சென்றுள்ளார்.

அமெரிக்காவில் புதிய ஜனாதிபதியாக திரு. றொனால் றீகன் பதவியேற்பதற்கு முன்பே அவரது நிர்வாகத்தினர் நமீபியா விவகாரம் தொடர்பாக புதிய முயற்சியொன்றில் ஈடுபடுவதையே இந்நடவடிக்கை காட்டுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (வெ)

## இந்திரா—கருணாநிதி சந்திப்பு

புதுடில்லி, நவ. 14

இந்திய தேசிய ஒருமைப்பாட்டுக் கமிட்டியின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக புதுடில்லி சென்ற தி. மு. க தலைவர் திரு. மு. கருணாநிதி அங்கு பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இப்பேச்சுவார்த்தையின் போது தமிழ்நாட்டின் அரசியல்நிலை குறித்து இருவரும் கலந்துரையாடியதாகக் கூறப்படுகிறது. (ரூவ)

## கிராமாட்சி மன்றம், அச்சுவேலி

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 1981

பின்வரும் விடயங்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு இவ்வலுவலகத்தோடு தங்களைப் பதிவு செய்துகொள்வதற்கு விரும்பும் பிரசித்தி பெற்ற வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்தலுக்கான விண்ணப்பங்கள் ஒவ்வொரு விடயங்களுக்கெதிராகவும் காட்டப்பட்டுள்ளவாறுன மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணங்களுடன் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்ப மேலுறையின் இட துபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் — 1981'' என எழுதப்பட்டு 5-12-1980-ந் திகதியன்று அல்லது அதற்கு முன் எனக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

| விடயம் | ரூபா |
|---|---|
| 1. எழுதுகருவி வகைகள் | 50-00 |
| 2. அலுவலக உபகரணங்களும் தளபாடங்களும் | 50-00 |
| 3. கோலவுடைகள் | 25-00 |
| 4. அச்சிடுதல் | 50-00 |
| 5. மின்சாரப் பகுதிக்கான பொருட்கள் | 150-00 |
| 6. சுகாதாரப் பகுதிக்கான பொருட்கள் | 50-00 |
| 7. இரும்புச்சாமான்கள், கட்டிடப் பொருட்கள் வீதி வேலைகளுக்கான பொருட்கள் | 50-00 |
| 8. வாசிகசாலைப் புத்தகங்கள் | 25-00 |

### சேவைகள்

| | |
|---|---|
| 1. ரூபா 20,000/-க்குப்பட்ட சிறிய வேலைகள் | 150-00 |
| 2. ரூபா 20,000/-க்கு மேற்பட்ட வேலைகள் | 250-00 |
| 3. தகரவேலைகளும், இரும்பு வேலைகளும் | 5-00 |
| 4. வண்டிகள், ஏணிகள் ஆகியன பழுதுபார்த்தல் | 5-00 |

பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கேள்விகள் கோரப்படும். ஆனால் சில அவசிய சந்தர்ப்பங்களில் வேறு வழங்குநர்களிடமிருந்தும் கேள்விகள் கோருவதற்கு எமக்கு அதிகாரமுண்டு. குறிப்பிட்டகால எல்லைக்குள் பொருட்களை வழங்காத அல்லது குறிப்பிட்ட திகதியினுள் கேள்விகளை அனுப்பாத வழங்குநர்களின் பதிவு அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.

விசேட ஆணையாளர்,
கிராமாட்சி மன்றம்,
அச்சுவேலி.

கிராமாட்சி மன்ற
அலுவலகம்,
அச்சுவேலி,
12-11-1980, 7348

உடன் விற்பனைக்குண்டு!
Three Phase & Single Phase
எலக்றிக் மோட்டோர்ஸ்
(ELECTRIC MOTORS)
1/4 H. P., 1/3, 1/2, 3/4
1, 1.5, 2, – 30 H. P.
மற்றும்
இந்திய 3 Phase ஸ்ராட்டர், மோட்டோர், சுவிச் (ஸ்டார் டெல்டா)
கிடைக்குமிடம்:
ருஜு ஸ்ரோர்ஸ்,
67, 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 372.
✯ Importers: RAZZAK & CO., GAMPOLA.




## முல்லைத்தீவுப் பட்டணசபை

## 1981-ம் ஆண்டிற்கான ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி

## விற்பனை செய்யும் உரிமை

1-1-1981 தொடக்கம் 31-12-1981 வரையிலான காலப்பகுதிக்கு கீழ் குறிப்பிடுவனவற்றிற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இரு பிரதிகளில் 1-12-1980-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வியாபாரம் | கடை இல. | 1980ல் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. மாட்டிறைச்சிக்கடை | 1 | 15952-32 | 1000/- | 25/- |
| 2. மாட்டிறைச்சிக்கடை | 2 | 20000-00 | 1000/- | 25/- |
| 3. ஆட்டிறைச்சிக்கடை | — | 10000-00 | 1000/- | 25/- |

2. மேற்படி வைப்புப் பணமும், கேள்விப் படிவக்கட்டணங்களும் ரொக்கப்பணமாகச் செலுத்துவதின் பேரில் 28-11-1980-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் வழங்கப்படும் படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் கேள்விப் படிவப் பணங்கள் திருப்பித்தரப்படமாட்டாது. உடன்படிக்கை எழுதப்பட்ட பின்னரே கேள்விப்பிணை திருப்பிக் கொடுக்கப்படும்

3. சென்ற வருடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித்தொகையிலும் பார்க்க குறைவான கேள்விகள் நிராகரிக்கப்படும்.

4. முன்னைய வருடங்களில் தவறுனராகச் சபையால் கருதப்பட்டவர்களுக்கும், ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டவர்களுக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது.

இதில் விசேட ஆணையாளரின் தீர்ப்பே முற்றானதும், முழுமையானதுமாகும்.

மேற்கொண்டு விபரங்கள் இக்காரியாலயத்தில் வேலை செய்யும் நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஒப்பம்
பி. எல். பற்றிக்,
விசேட ஆணையாளர்,
பட்டணசபை, முல்லைத்தீவு.

பட்டணசபை அலுவலகம்,
முல்லைத்தீவு,
10-11-1980. 7356

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருள்சூழ்ந்த எதிர்காலம்!

## மே. ஜெர்மன் மாஜி அதிபர் எச்சரிக்கை

மட்றிக், நவ. 14

''கிழக்கு, மேற்கு நாடுகளுக்கிடையிலும், செல்வந்த வறிய நாடுகளுக்கிடையிலும் தற்போது ஏற்பட்டுள்ள பல்வேறு நெருக்கடியான நிலைமை உலகின் எதிர்காலத்தை இருள் சூழ்ந்ததாக்கியுள்ளது''

மேற்கண்டவாறு மேற்கு ஜெர்மனின் முன்னாள் அதிபர் திரு. வில்லிபிராண்ட் மட்றிக் நகரில் நடைபெறும் ஐரோப்பிய பாதுகாப்பு மகாநாட்டில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது;

''ஆயுதப்போட்டி நிறுத்தப்பட்டு உலகின் முன்னேற்றத்திற்கு சகல நாடுகளும் ஒத்துழைக்காவிட்டால் அடுத்த பத்தாண்டுகளில் என்ன நடக்குமென்பதை நினைத்துப் பார்க்கவே முடியாதிருக்கிறது'' என்றார்.

இம் மகாநாட்டில் சோவியத்யூனியனுக்கும், மற்றும் பல சோசலிச நாடுகளுக்கும் எதிராகப் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (வெ)

## ''அசாம்பிரச்னை நியாயமான முறையில் தீர்த்துவைக்கப்படும்''

### பிரதமர் இந்திரா சொல்கிறார்

கௌகாத்தி, நவ. 14

''அசாம் மாணவர்களின் கோரிக்கைகளை நியாயமான முறையில் தீர்த்துவைக்கவே மத்திய அரசு விரும்புகின்றது. இக் கோரிக்கைகள் அசாம் மாநிலத்தின் நலன்கள், ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தீர்த்துவைக்கப்படும்''

மேற்கண்டவாறு இந்தியப் பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி அசாம் பிரச்னை தொடர்பாக அம் மாநில இந்திராகாங்கிரஸ் இளைஞர்களுக்கு அனுப்பிவைத்துள்ள செய்தியில் கூறியுள்ளார்.

அவர் அச்செய்தியில் தொடர்ந்துகூறியுள்ளதாவது:

''அசாம் மாணவர்களின் கிளர்ச்சிப்பாதை அநாவசியமானது, தீங்கானது. இது குறித்து அசாம் மாணவர்களும் இளைஞர்களும் தங்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

## நேருவின் 91-வது பிறந்த தினம்

புதுடில்லி, நவ 14

ஜவர்ஹலால் நேருவின் 91வது பிறந்ததினம் இன்று இந்தியா எங்கும் கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி குழந்தைகள் தின தபால் முத்திரையொன்றை வெளியிட்டுவைப்பார். தமிழ் நாட்டிலும் நேருவின் பிறந்த தினத்தையொட்டி மூன்று நாட்களுக்கு விழாக்கள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (வெ)

## 'ஹோர்மஸ்' நீரிணையில் பிரிட்டன் நாசகாரிக்கப்பல்

லண்டன், நவ. 14

ஈரான்—ஈராக் யுத்தம் நீடிக்கும் வரை 'ஹோர்மஸ்' நீரிணை வழியாக கப்பல்கள் தடையின்றிப் போய்வருவதை உறுதிப்படுத்துவதற்காக பிரிட்டன் கடற்படைப் பிரிவொன்றை அங்கு நிரந்தரமாக வைத்திருக்கத் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'ப மிங்ஹாம்' என்ற நாசகாரிக் கப்பலையே பிரிட்டன் அங்கு வைத்திருக்கப்போவதாகக் கூறப்படுகிறது. (வெ)

## சபையில் ஒலித்தது

(மாலி)

அமிர்: யாழ்.—கொழும்பு ரயில் கட்டணம் 14, 15 ரூபாவால் அதிகரித்திருக்கிறது.

ஏ. ஸி. எஸ். ஹமீட்: யாழ். — கொழும்பு பஸ் கட்டணம் என்ன?

அமிர்: கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நேரடி பஸ் சேவை இல்லை. கொழும்பிலிருந்து நியூயோர்க்குக்குத்தான் நேரடி பஸ் சேவை உண்டு!

எம். சிவா: 'ஏயர் பஸ்!'

தர்மா: அமைச்சர் இந்நாட்டில் இருப்பதில்லையர்ததால் அவருக்கு இது தெரியாது?

0 0 0

வீரசிங்க மல்லிமாராய்ச்சி: மதவாச்சி உறுப்பினர் நம்மவர். அவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரானால் எமக்கு மகிழ்ச்சியாகவிருக்கும். எஸ் டபிள்யூ. ஆர். பண்டாரநாயக்காவும் நம்மவர்தான்.

ரூனி: சுதந்திரக்கட்சியின் தலைவர்கள் அனைவருமே பழைய ஐ. தே. க. காரர்கள்தான்!

மைத்திரி: நீங்கள் (ரூனி) பழைய சுதந்திரக் கட்சிக்காரர்!

மல்லிமாராய்ச்சி: சுதந்திரக்கட்சியின் ஏழு உறுப்பினர்களையும் எப்படித்தான் புரட்டிப் புரட்டிப் பார்த்தாலும் அவர்களில் நீங்கள் (மைத்திரி மட்டும்தான்) தலைமைகுத் தகுதியானவார்.

0 0 0

மைத்திரி: சந்திரனும் சூரியனும் உள்ளவரை பொருள்களின் விலைகளை நாம் உயர்த்தமாட்டோம் என்றீர்களே?

மல்லிமாராய்ச்சி; சேலை இல்லாமல் நாங்கள் வீதிகளில திரிவோம்; அடுப்பில்லாமல் சமைப்போம் என்றெல்லாம் நீங்கள் கூறியதை மறந்துவிட்டீர்களா?

ரி. சிவசிதம்பரம்: கடந்த ஆண்டு 161 ஆயிரம் பேருக்கு வேலை வழங்கிய அரசு; வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை இவ்விடயத்தில் அநாகரிகமான - நீதியற்ற-துரோகமான விதத்திலேயே செயல்பட்டது. அரசியல் செல்வாக்குத்தேடும் உபாயமாகவே வேலைவாய்ப்பை அது பயன் படுத்துகிறது.

ரி. சிவா: 5 மாத காலத்தில் போக்குவரத்துச் சபைக்கு ஏழரைக்கோடி ரூபா நஷ்டமெனில் அடுத்த ஆறுமாத காலத்தில் சகல பஸ்களையும் கட்டையில் வைக்கவே நேரும்.

ரி. சிவா: நகரில் வசிப்பவர்களுக்கு தொலைககாட்சிப் பெட்டி தேவையாக இருக்கலாம். ஆனல் கிராமத்து மக்களுக்கு அத்தியாவசிய தேவைப் பூர்த்தி அவசியம்.

எஸ். டி, பண்டாரநாயக்கா: நீங்கள் ஆட்சிக்கு வந்த 24 மணி நேரத்தில் பொருள்களின் விலை இரட்டிப்பாகியது.

எஸ். டி. :வெளிநாட்டுக்கொள்கையை அரசு முழுமையாக மாற்றிவிட்டது.

ஏ. ஸி. எஸ். ஹமீட் (வெளிநாட்டமைச்சர்): நான் அதனை மறுக்கிறேன். வெளிநாட்டுக்கொள்கையில் எவ்வித மாற்றமும் இல்லை.

உப சபாநாயகர்; அமைச்சரின் மறுப்பை உறுப்பினர் ஏற்கவேண்டும்.

எஸ் டி.: அப்படியானல் கொள்கைக்கு முரணாக செயல்படுகிறது. அதன் நடவடிக்கைகளை இந்தியாவுக்குக்கூட பயமுறுத்தலாக அமைகின்றன. திருமலையில் 2500 ஏக்கர் காயை அமெரிக்கக் கம்பனிக்கு எண்ணெய் ஆய்வுக்காகக் கொடுத்திருக்கிறீர்கள்.

0 0 0

எஸ். டி: பாராளுமன்ற உறுப்பினர்கள் 3000 ரூபா சம்பள உயர்வு, 100 கலன் இலவச டீசல் கோரிய போது தொழிலாளர் 300 ரூபா சம்பள உயர்வு கோரியது தவறு?

எஸ். டி: 1971 ஏப்ரல் கிளர்ச்சியின்போது சிறைவைக்கப்பட்ட நானும் ரோகண விஜய வீராவும் உயிரோடு திரும்புவோம் என்று எண்ணியிருககவில்லை. இன்று நாம் உயிருடன் இருப்பது திருமதி சிறிமா பண்டாரநாயக்காவினுல்தான்.

எஸ். டி: இந்த அரசு ஆட்சிக்கு வந்ததும் கைத்தொழில் வேலை வாய்ப்புகளைப் பலர் இழந்தார்கள்.

அமைச்சர் மத்தியூ: வாடிவீடுகளுக்கு அழைத்துச் சென்று யுவதிகளுக்கு வேலை கொடுத்தீர்கள். அந்த வேலை இப்போது இல்லை என்று கூறுகிறீர்கள்?

எஸ். டி: அமைச்சர் பேசும் பேச்சைப் பார்த்தீர்களா உபசபாநாயகர் அவைர்களே!

எஸ். டி: 1983 இல் உங்களில் ஒருவர் இச்சபைக்குத் திரும்பி வந்தாலே போதுமானது!

(ப)


# மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்டில் உங்கள் சேமிப்பினை முதலிடும்போது நீங்கள் அடையும் நன்மைகள் பலவிதம்

மொத்த ஆதனம் ரூபா 25 கோடிகளுக்கும் மேலாகக்கொண்டு
மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட் இலங்கையின் மிகப்பெரிய நிதி நிறுவனமாக விளங்குகிறது.
மூலதன ஒதுக்கீடுகளும் முன் ஏற்பாடுகளுமாக ரூபா 3 கோடிக்கும் கூடுதலாகக் கொண்ட
உறுதியான நிதி நிறுவனம் மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்.
தனியார் வைப்புக் கணக்காக 15 கோடிக்கும் அதிகமாகத் தன்னகத்தே கொண்டு
பொது மக்களின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமாகத் திகழும் நிறுவனம்
மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்.
உங்கள் வசதிக்கேற்ற வகையில் தெரிவு செய்ய வல்ல முதலீட்டு திட்டங்கள்
மாதாந்தமோ அல்லது முதிர்ச்சியின் பின்னரோ பெறக் கூடிய கவர்ச்சிகரமான வருமானம்

## ஒரு வருட வைப்புத் திட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| மாதாந்தம் செலுத்தப்படுவது | 20% | முதிர்ச்சியின பின்னர் செலுத்தப்படுவது | 22% |

அதி குறைத்த வைப்புத் தொகை ரூபா 2,500/-

## இரு வருட வைப்புத் திட்டங்கள்

| மாதாந்தம் செலுத்தப்படுவது | | முதிர்ச்சியின் பின்னா செலுத்தப்படுவது | |
|---|---|---|---|
| ரூபா 2,500/-ல் இருந்து ரூபா 50,000/- ற்கும் கீழ் | 21% | ரூபா 2,500/-ல் இருந்து ரூபா 50,000/- ற்கும் கீழ் | 24% |
| ரூபா 50,000/-ல் இருந்து ரூபா100,000/- ற்கும் கீழ் | 22% | ரூபா 50,000/-ல் இருந்து ரூபா 100,000/- ற்கும் கீழ் | 25% |
| ரூபா 100,000/- ல் இருந்து அதற்கும் மேல் | 24% | ரூபா 100,000/- ல் இருந்து அதற்கும் மேல் | 27% |

மெர்க்கன்டைல் கிறெடிட் லிமிட்டெட்
இலங்கையின் மிகப்பெரியதும் உறுதிவாய்ந்ததுமான நிதி நிறுவனம்.
51-53, ஜனதிபதி மாவத்தை, கொழும்பு 1. தொலைபேசி 26611-19
கிளைகள்: யாழ்ப்பாணம்: 11/8 ஸ்டான்லி வீதி, தொலைபேசி: 321
மாத்தறை 27-1/1, தர்மபால மாவத்தை, தொலைபேசி 2466
அநுராதபுரம் 2, ஹரிச்சந்திரா மாவத்தை, தொலைபேசி 534
கண்டி 901/A பேராதனை வீதி, தொலைபேசி 4196
சேவை இணைவர்கள் (ஏஜன்ட் மார்) எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ளனர்.

''மேலதிக விபரங்களுக்கு எமது யாழ்ப்பாணக் கிளை அலுவலகத்தை நாடவும்''

MASTERS


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஈஸ்வரன் அல்லது குருவருள் கிட்டுவதற்குப் பணிவும், தன்னல மறுப்பும் இன்றியமையாதவை.

—சுவாமி சிவானந்தர்

## நமது நோக்கு

### வாழ்க்கைத்தரம்

வாழ்க்கைத் தரமும், விலைவாசியுமே நாம் இன்று ஜபிக்கும் மந்திரங்கள்.

இவை இரண்டும் இறக்குமதிப் பொருள்கள் என்றும், எங்கள் நாகரிகத்துக்கு புறம்பான கருத்துக்கள்என்றும் நாம் முற்றாக மறந்துவிட்டோம்.

இவை எங்கிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள்? நிச்சயம், மேனாட்டுப் பொருட்கள் இவை.

இந்தியாவிலிருந்தோ வேறெங்கிருந்தோ தொற்றுநோய் இங்கு பரவாமல் வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் சுகாதாரதிணைக்களமூலம் எடுக்கும் திட்டம் நடைமுறையில் இருப்பதை நாமறிவோம்.

தொற்றுநோய் உடம்பைத்தான் தாக்கும் என்ற நம்பிக்கையில் இத்திட்டம் செயற்படுகின்றது. உள்ளத்தைத்தாக்கும் தொற்றுநோய்கள் இங்கு வாழும் மக்கள் குலத்தையே கெடுத்துவிடுமென்பதை நாம் உணர்வதில்லை.

வெள்ளையர் ஆட்சியில் நாமடைந்த நன்மைகள் பல. அவற்றைவிட அதிகமானவை தீமைகளே! இன்று எமது நாட்டை மட்டுமல்ல; அந்நியர் ஆட்சியிலிருந்த பல நாடுகளையும் தாக்கிவரும் முதல் 'நம்பர்' தீயசக்தி வாழ்க்கைத் தரம் என்ற மேனாட்டுப் பசாசு!

எல்லா மக்களையும் கவர்ந்துகொண்ட ஒரு பொதுதரப்பட்ட கருத்தை நாம் இவ்வளவு துணிவுடன் கண்டிக்க காரணம் யாது?

பசியும், பட்டினியும் பணத் தட்டுப்பாடும் என்ற பல்லவியே நாடெங்கிலும் பாடப்பட்டு வருகிறது. இதன்விளைவே— இன்று அரசாங்கம் சட்டம், ஒழுங்கு, அமைதி என்பவற்றைச் சமாளிக்கமுடியாதிருத்தல், வழிப்பறிக் கொள்ளையும் களவும், கொலையும் அதிகரிப்பதற்கு இன்றைய பஞ்சநிலையும் காரணமென்று கூறப்படுகிறது.

எந்த அரசாங்கமும் இன்றைய நிலைமைக்கு நிவாரணம் அளிக்க முடியாதென்று தெளிவாகவும் திடமாகவும் கூறியிருக்கின்றார் நாட்டின் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன. அவருடைய தெளிந்த கூற்றை நாம் கூர்ந்து கவனிக்கவேண்டும். காரணம்; இன்றுமட்டுமல்ல, 1983ம் ஆண்டிலும் அவருடைய கட்சியே மீண்டும் அரசாங்கத்தை அமைக்க முடியுமென்று அவர் நிருபித்துள்ளார்.

எனவே, தப்பும் வழி ஏது? முன்னேற்றம் என்று நாம்கருதுவது எது? நண்பன் நல்லாயிருக்கின்றான் என்று நாம் சொல்லும்போ எமது மனத்திற்படுவது என்ன? நல்ல தொழில், நல்ல சம்பாத்தியம், வீடு வாசல், வாகனவசதி, செல்வம், செல்வாக்கையே நாம் கருதுகின்றோம். வேறெந்த வகையிலும் அவர் வளர்ச்சியடைந்திருக்கிறாரா என்பது பற்றிக் கவலையில்லை வாழ்க்கையின் சிறந்த பண்புகள் ஏதும் அவரில் உண்டா?

இல்லாமலிருக்கலாம்; இருந்தும் அவரேபெரியவரென்று முடிவு மேல்நாட்டு நாகரிக, வியாபார மனப்போக்கின் முடிவாகும்.

கீழைத்தேசத்தில், சீன, இந்தியா, இலங்கைபோன்ற நாடுகளின் சொந்த நாகரிகம், ஆத்மீக வளர்ச்சியையே முன்னேற்றமாகக் கொண்டு வந்தது லௌகீக வளர்ச்சி எவ்வளவு அதிகரிக்கின்றதோ, ஆத்மீக வளர்ச்சி அவ்வளவிற்குக் குன்றும். ஆத்மீக வளர்ச்சியை நாடும் மனிதன், தன்னுடைய உலக வாழ்விற்குரிய தேவைகளை என்றுமே பெருக்கமாட்டான். பிறப்பிலேயே செல்வனாக இருப்பவனும் தன் செல்வத்தை தன்னுடையதேவைகளுக்கு அவசியமற்றுச் செலவழிக்காமல் மற்றவர்களுக்கு உபகரிப்பான்.

பிறக்கும் பொழுது கொண்டுவந்ததில்லை; இறக்கும் பொழுது கொண்டு போவதில்லை; இடைநடுவே வரும் செல்வம் நம்பிக்கைச் சொத்தென்று கணித்து பரோபகாரத்தில் செலவழிப்பது கீழைத்தேசநாகரிசம்.

நாம் இங்கு குறிப்பிடுவது சடலஞானம் அல்ல! பட்டினியால் அரைவயிறோ முழுவயிறோ சடலக்குப் போனவர்கள் எங்கள் நாகரிகவாழ்வில் ஒருவருமில்லை. ஒருவன் பட்டினி கிடந்தால் ஜெகத்தை அழிக்கவேண்டுமென்று அறை கூவுவது எங்கள் நாகரிசம்.

பசி, பட்டினியால், கொள்ளை வழிப்பறி அதிகரிக்கிறதென்று கூறுவது அறியாமையே. எங்கள் தேவைகளைப் பெருக்கி ஆடம்பர வாழ்வை வாழப் பழகின நாம். இவ்வித் செயல்களில் ஈடுபடுவது அதிசயமல்ல.

எளிய வாழ்வும். சிறந்த பண்பும் இணைபிரியா நண்பர்கள் இதனைப் பரிகாசம் பண்ணிவந்த முதலாளித்துவ' கம்யூனிஸ சித்தாந்தங்கள் இன்று மண்கவ்வும் நிலையை அடைகின்றன.

சிக்கன வாழ்வே சிறந்த வாழ்வு என்றும், ஆத்மீக வளர்ச்சிக்கு அதுவே உதவுமென்றால் பட்டினியால் என்ன பயம்?

## யாழ் நகரில் போக்குவரத்து சமிக்ஞை பொருத்தப்படுமா?

தற்போது யாழ். நகரின் வீதிகளில் வாகனங்களின் தொகை அதிகமாகப் பெருகியுள்ளது. இதனால் நகரை நோக்கிவரும் மக்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டே வீதிகளில் நடமாடவேண்டிய கட்டத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இவற்றிற்கெல்லாம் முற்றுமுழுதான பிழை திருத்தத்தை நாம் எங்கேசெய்வதன் மூலம் பொதுமக்களாகிய பாதசாரிகளைப் பாரிய வீதி விபத்துகளிலிருந்தும் காப்பாற்றலாம் என்பதை ஆராய வேண்டும்.

பொதுமக்கள் வீதிகளைச் சுலபமாகக் கடந்து செல்வதற்கான குறியீடுகள் பொறிக்கப்பட்ட விளம்பரப் பலகையோ அல்லது வீதியின் மத்தியில் குறிப்பிட்டநிறங்களோ அதிகப்படியாக மக்கள் பாவிக்கும் இடங்களில் இல்லாமலிருக்கிறது. இதனால் சினிமா, ஆஸ்பத்திரி, பஸ்நிலையம், கல்லூரிகள் போன்ற இடங்களிலிருந்து வரும், போகும் 'மக்கள், மாணவர்கள் செய்வதறியாது ஆட்டுமந்தைபோல் சிந்திச் சிதறி வீதிகளில் வாகனங்களுக்கு ஈடுகொடுக்க முடியாது கஷ்டமுறுகிறார்கள். இவற்றை நிவிர்த்திசெய்ய பொதுமக்கள் கடவைகள் உடனடியாகச் செயற்படுத்தவேண்டும்.

இதுமட்டுமல்லாது வீதிச்சந்திகளில் வாகனங்களின்போக்குவரத்துக்களைச் சட்டரீதின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் சமிக்கையாளர்களோ அல்லது கொழும்புமாநகரத்தில் அமைந்துள்ளதுபோல் சமிக்ஞை மின்சார விளக்குகளோ இல்லாத காரணத்தால் தற்போது யாழ். நகரில் சட்டத்தைமீறிப் பலவாகனங்கள் ஓடுவதன்மூலம் பல வீதி விபத்துக்கள் நடந்துகொண்டிருப்பதைக் காணலாம். இவற்றையெல்லாம் உடனடியாகக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவதற்கு காவற்றுறையினர் தற்காலிகமாகுதல் தங்கள் உத்தியோகத்தரை நியமித்து சமிக்ஞைகள் மூலம் வாகனங்களை இயங்கச் செய்ய வேண்டும். இது மக்களுக்கும் வாகனங்களுக்கும் செய்யும் பேருதவியாகும். வளர்ந்து வரும் உலக அரங்கிலே நமது யாழ் நகரும் புதுப்பொலிவுடன் சரிநிகராகத் திகழ்வதற்கும் பொதுமக்களை விபத்துகளிலிருந்தும் காப்பதற்கு மின்சார சமிக்கை விளக்குகளைப் பொருத்துவதற்கு யாழ். மாநகர முதல்வரும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினரும் முயற்சியெடுப்பார்களா?

கே. எஸ். இராஜேஸ்வரன்

ஆடியபாதவீதி.
நல்லூர், யாழ்ப்பாணம்

## மக்கள் கருத்து

## குடிநீர்ப்பிரச்னை தீருமா?

(வவுணதீவு)

மட்டக்களப்பு - படுவான்கரையின் பல கிராமங்களிலும் நீண்டகாலப் பிரச்னையாக இருந்து வரும் குடிநீர்ப் பிரச்னையை பிராந்திய அபிவிருத்தி அமைச்சரும் தொகுதி எம் பியுமான திரு. செ. இராசதுரை இவ்வருட இறுதிக்குள் தீர்த்து வைப்பாரா?

கடந்த தை மாத முற்பகுதியில் வவுணதீவில் கிராமிய கைத்தொழில் மண்டபமொன்றை திறந்துவைத்துப் பேசுகையில் அமைச்சர் அளித்த வாக்குறுதியை பொதுசன வட்டாரங்கள் இப்பொழுது சுட்டிக் காட்டத் தொடங்கியுள்ளன.

இக்குடிநீர்ப் பிரச்னையை இவ்வருட இறுதிக்குள், அல்லது வெளிநாட்டு உதவித் திட்டத்தின்கீழ் தீர்த்து வைப்பதாக அமைச்சர் உறுதி தெரிவித்திருந்தார். இதனுடன் வரவு-செலவுத் திட்டத்திலும் பிரதேச அபிவிருத்திக்கென பெருந்தொகைப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்தோ அல்லது வெளிநாட்டு உதவியுடனோ இத்திட்டம் சாத்தியமாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## செயல்முறை விளக்கம்

(யாழ்ப்பாணம்)

'டிம்கோ' மரக்கறியும் அடுப்பும் பாவனை பற்றிய செயல்முறை விளக்கம், யாழ். திருக்குடும்ப கன்னியர் மட ஆங்கில பாடசாலையில் நாளை காலை 10-00 மணிக்கு திருமதி சி. ரா டி. துரைராசாவினால் அளிக்கப்படவிருக்கிறது.

அரசாங்க பரக்கூட்டுத்தாபன வடபிரதேச முகாமையாளர் இதனை ஒழுங்கு செய்துள்ளார். ( )

### இன்று

## அபிவிருத்திச் சங்க கூட்டம்

(நீர்வேலி)

கரந்தன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் இன்று மாலை பாடசாலை அதிபர் திரு செ. நமசிவாயம் தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் பிரதமவிருந்தினராக யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வியதிகாரி திரு. எம். எம். மன்சூரும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. ஆ. வ. தங்கராசாவும் கலந்து கொள்கின்றனர்.

இளைப்பாறிய அதிபர் திரு. ம. க. நடராசா இக்கூட்டத்தில் சிறப்புரையாற்றுவார். (வெ)

## நட்புறவுச் சங்க கூட்டம்

(பண்டத்தரிப்பு)

சங்கானை பொலிஸ்- பொதுமக்கள் நல்லுறவுச் சங்கத்தின் விசேஷ செயற்குழுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் சங்கானை கலாச்சாரமண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்கானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. டி. பிரேம்தாசா தலைமையில் இக்கூட்டம் நடைபெறும். (அ)





# தமறேன்

## அனைத்தையும் அழிப்பது

தமறேன் 60% எல். சி. தலைசிறப்புள்ள கிருமிநாசினி. அது பல விதங்களில் செயற்படும். பூச்சிகளின் உடல் முழுதும் செறிந்தும், நிலைத்து நின்றும், பட்ட மாத்திரத்திலும் உட்சென்று தாக்கியும் செயற்படும் பல சிறப்புகள் கொண்டது. கொறிக்கும், உறிஞ்சும், துளைக்கும் பூச்சி புழுக்களையும், மூட்டுப் பூச்சி, அழுக்கணவன், வண்டு, அந்துப்பூச்சி, மயிர்க்குட்டி, இலைப்பூச்சிகள், தாவர மூட்டுப் பூச்சிகள், இலைத் தத்துவெட்டிகள், சந்துக்குத்திகள், மற்றும் நெல், பருத்தி, நாரத்தை முதலாம் புளி மரங்கள், காய்கறிகள், மிளகாய், கரும்பு, அவரை, சோளம், உருளைக்கிழங்கு. வெங்காயம், புகையிலை, கனி மரங்கள், அலங்காரத் தாவரங்கள் ஆகியவற்றைத் தாக்கும் எல்லாப் பூச்சி இனங்களையும் கட்டுப் படுத்த உலகெங்கும் தமறேன் பரவலாகப் பாவிக்கப்படுகிறது.

தமறேன் பல முனைச் சக்தி கொண்டதாகையால், பல்வேறு விதமான பூச்சியினத் தாக்குதலுக்கு ஆளாகும் பயிர்களுக்குப் பாவிக்க அது மிகவும் ஏற்றது.

பாவியுங்கள்
BAYER
தரமான பீடைநாசினிகள்

இலங்கையில் 'பாயர்' பீடை நாசினிகளின் உற்பத்தியாளர்கள்:

ஹேகெம் லிமிட்டெட்

50, பொஸ்டர் ஒழுங்கை
கொழும்பு 10.
தொலைபேசி: 93563

melADS

50 மி. லீட்டர் ரூபா 13-00
200 மி. லீட்டர் ரூபா 42-50
100 மி. லீட்டர் ரூபா 23-00
450 மி. லீட்டர் ரூபா 87-50
4.5 லீட்டர் ரூபா 825-00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியக் கோட்டிலிருந்து வழுவாது ஏழைகளின் நண்பனாக வாழ்ந்தவர்

முன்னாள் செனட்டரும் முன்னாள் சுன்னாகம் பட்டினசபைத் தலைவருமாக இருந்து, பொதுவாக இலங்கைவாழ் மக்களுக்கு, சிறப்பாகத் தமிழ்மக்களுக்கு அரும்பெரும் தொண்டாற்றிய திரு. பொன்னம்பலம் நாகலிங்கம் கடந்த புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

தனது இளமைப்பராயத்தில் (1920—19 5) இளைஞர் காங்கிரசில் செயலாளராக இருந்து இலங்கையின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட இவர். 1936-ல் லங்கா சமசமாஜக் கட்சியில் சேர்ந்தார். தமிழ்மக்கள் மத்தியில் குறிப்பாக வடபகுதியில் சமசமாஜக் கட்சியை வேரூன்ற வைத்தவர் திரு. நாகலிங்கமே.

### தீண்டாமையை ஒழிக்க

வடபகுதியில் மிகப் பயங்கரமாக சாதிவெறி தண்டவமாடிய காலத்தில் தீண்டாமையை ஒழிக்க அரும்பாடுபட்டார். இதற்காக மகாத்மா அண்ணலின் சாத்வீக வழியையே பின்பற்றினார். 78-வது வயதில் தமது இதுதிமூச்சு நிற்கும்வரை சமசமாஜக்கட்சியின் இலட்சியங்களில் இருந்து இம்மியளவும் விலகாது அந்த லட்சியங்களுக்காக உழைத்து அரசியல் வாழ்வில் தனக்கோர் தனியான இடத்தைப் பிடித்துக்கொண்டவர் திரு நாக்ஸ்.

### பாராளுமன்ற தேர்தலில்

1947-ல் நடைபெற்ற முதல் பாராளுமன்றத் தேர்தலில் காங்கேசன்துறைத் தொகுதியில் சமசமாஜக் கட்சியின் அபேட்சகராகப்போட்டியிட்டு தொழிலாளி, பாட்டாளி மக்களின் வாக்குகளின் பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டார். இவரது செல்வாக்கையும் மதிநுட்பத்தையும் திறமையையும் அறிந்துகொண்ட சமசமாஜக் கட்சியின் தலைமைப்பீடம் 1951-ல் தனது கட்சியின் பிரதிநிதியாக மேலவை (செனட்சபை) உறுப்பினராக்கியது. இதுவரை நிலச்சுவாந்தர்களதும்

**- எஸ். நடராஜா -**

உயர்வகுப்பு மக்களினதும் உறைவிடமாக விளங்கிய மேலவை, முதல்முறையாக தொழிலாளவர்க்கத்தின் பிரதிநிதியாகவும், சாதாரண குடும்பத்தைச் சார்ந்தவராகவுமிருந்த திரு. நாக்ஸை பெருமையுடன் பெற்றுக்கொண்டமை இவரது சலியா உழைப்பும் மதிநுட்பமுமாகும்.

### முதல் குரல் இவருடையதே!

மேலவையில் தீண்டாமை ஒழிப்புப்பற்றி 'முதன்முதல் குரல் கொடுத்து பிரேரணை கொண்டுவந்தவர் திரு. நாகலிங்கமாகும். இதற்குமுன் இதுபற்றி மேலவையிலோ அன்றி ஆட்சி மன்றத்திலோ எந்த அரசியல்வாதியும் குரல் கொடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது 1960ல் நடந்த பொதுத்தேர்தலிலும் 1965ல் நடந்த பொதுத் தேர்தலிலும் சமசமாஜக் கட்சியின் அபேட்சகராகப் போட்டியிட்டார்.

### சுன்னாகம் பட்டினதந்தை

1963ல் சுன்னாகம் பட்டின சபையின் தலைவராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. பொன். நாகலிங்கம், 1977ல் அரசாங்கத்தால் பட்டினசபை கலைக்கப்படும் வரை தொடர்ந்து தலைவராக இருந்து அரும்பணிஆற்றினார் இக்காலத்தில் பட்டின சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் அபிவிருத்தியில் அயராது உழைத்து அதன் வெளித்தோற்றத்தையே மாற்றினார். சுன்னாகம் மத்தியசந்தை நூலகம் என்பன இவரது சேவையின் இரு சிறந்த உதாரணங்களாகும். இவர் இடதுசாரி இயக்கத்தில் ஈடுபட்டாலும் இறைபக்தி மிகுந்தவர் யோக சுவாமிகளின் அருள்பெற்று சமயவாழ்க்கை வாழ்ந்தவர். அன்பும் இரக்கமும் கொண்ட இவர், ஏழைகளின் நண்பனாக இருந்து அவர்களது கண்ணீர் துடைத்தவர். அன்னாரது ஆத்மா சாந்தியடையட்டும்.

## விவசாயப் பண்ணை

(புளியங்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்திலும் வவனியா மாவட்டத்திலுள்ள தமிழ் மகா வித்தியாலயத்திலும் மாதிரி விவசாயப் பண்ணை அமைக்கப்படவுள்ளது. இதற்கு தலா 2000/- ரூபாவை விவசாய வட்டாரக்கல்வி அதிகாரி திரு. பொ. கணேசமூர்த்தி ஒதுக்கீடு செய்துள்ளார் மேலும் பெரும்போக காலத்தில் சகல பாடசாலைகளிலும் விவசாய முயற்சிகளுக்காக விதை, விவசாய இரசாயனப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு 10,000 ரூபாவை பங்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது. (அ)

## நைஜீரியா பயணமானார்



கோப்பாய் கிறிஸ்தவகல்லூரியின் அதிபராயிருந்த திரு. சின்னையா சிவநேசன் சிரேஷ்ட கல்வி அதிகாரியாகப் பதவியேற்று அண்மையில் நைஜீரியா பயணமானார்.

இவர் கொழும்புத்துறை மேற்கைச்சேர்ந்த சின்னையா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரரும், யாழ். பரியோவான் கல்லூரி, சென்னை கிறீஸ்தவக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவருமாவார்.

இவர் யாழ். ஏ எவ் எஸ். கிளையின் தலைவராகவும், முத்தமிழ் வெளியீட்டுச்கழகத்தின் உபதலைவராகவும், வடமாகாண அதிபர் சங்கச் செயலாளராகவும் பணியாற்றினார்.

இவர் பலமேடை' வானொலி நாடகங்களை எழுதித் தயாரித்துள்ளார். பல நாடகங்களில் நடிகராகவும், நெறியாளராகவும் செயலாற்றினார் இரு நாடக நூல்களை வெளியிட்டுள்ளார்.

## தற்கொலை

(மன்னார்)

கணவன் மனைவி சச்சரவைத் தொடர்ந்து கணவன் தன் மகனுடன் ரயில் முன்பாய்ந்தார். கைகால் துண்டிக்கப்பட்ட நிலையில் அவர்கள் மரணத்தைத் தழுவினார்.

இச்சம்பவம் மடுவீதியில் நிலையத்திற்கு அண்மையில் நடைபெற்றது. திசநாயக்கா என்பவரும் அவரது மகனுமே ரயில் முன்பாய்ந்து இறந்தனர் முருங்கன் பொலிசாரின் உதவியுடன் மரண விராரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (அ)

## அசாம்...

( -ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைய மறுபரிசீலனைசெய்ய வேண்டும். தேசியநலன்கருதி அசாம் மக்கள் உழைக்கவேண்டும். அசாம் மாநிலத்தின் வளர்ச்சி தேங்கிநிற்கிறது. தேசிய பொருளாதார வாழ்வில் அசாம் தனது முழுப் பங்கையும் ஏற்காது'' என்றார்.

அசாம் பிரச்னை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு கௌகாத்திக்கு செல்வதில்பிரச்னையில்லையென்றும், ஆனல் புதுடில்லியிலேயே பிரதமமந்திரியும், மற்றும் அமைச்சர்களும் இருப்பதால் இங்கு பேச்சுவார்த்தை நடத்துவதேபொருத்தமானதென்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. ஸயீல்சிங் தெரிவித்துள்ளார்.

அசாம் பிரச்னை பற்றிய பேச்சுவார்த்தைகள் கௌகாத்தியில் இடம்பெற வேண்டுமென்று அசாம் மாணவர் சங்கம் உள்துறைஅமைச்சர் திரு. ஸ்யில்சிங்கை கேட்டிருந்தது தெரிந்ததே. (வெ)


இப்பொழுது கிடைக்கறது. NOW ON SALE சமையலின் செலவினங்களை குறைக்க

# டிம்கோ TIMCO

அடுப்புகளும், மரக்கரியும் பாவியுங்கள்.

வீட்டு சமையலின் எரிபொருள் செலவினங்களைக் குறைப்பதற்கு, அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் புதிய முயற்சி. மூன்று கிலோகிராம் (6½ ரூத்தல்) அளவுகொண்டு அழகிய பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்ட ''டிம்கோ'' மரக்கரியும், களிமண்ணினல் தயாரிக்கப்பட்ட அடுப்பும் விற்பனை செய்யப்படுகின்றன.




**மரக்கரி உபயோகத்தின் பலாபலன்கள்..**

- விறகில் கிடைக்கும் உஷ்ணத்தில் இருமடங்கு உஷ்ணம் மரக்கரியில் கிடைக்கிறது.
- விறகைவிட நான்கு மடங்கு எரிதிறன் மரக்கரி கொண்டது.
- மரக்கரியை உபயோகிப்பதில் சுலபம்.
- மண்எண்ணெய் பாவிப்பிலும் குறைந்தளவு செலவு மரக்கரி பாவிப்பதால் ஏற்படும்.
- மரக்கரி பாவிப்பதனல், மண்ணெண்ணெயைப் போலன்றி உள்ளூர் எரிபொருள் சக்தியை பயன்படுத்தும் வசதி.
- விறகைப்போலன்றி, மரக்கரி விரைவாக எரியும் திறன் கொண்டதல்ல.
- மரக்கரி பாவிப்பதால் புகையோ, கரியோ பிடிக்காது. இதனல் வீட்டில் கரிபடிய மாட்டாது. பாத்திரங்களிலும் கரிப்பிடிக்காது.
- மரக்கரி பாவிப்பதனல், புகையினலும், கரியினலும் ஏற்படும் நோய்கள் தவிர்க்கப்படும்.
- மரக்கரி பாவிப்பதனல் சமையலறை சுத்தமானதாகவும், அழகாகவும் இருக்கும்.
- மரக்கரி பாவிப்பதனல், பெண்களுக்கு விடுதலை கிடைக்கிறது.
- மரக்கரி பாவிப்பதனல் காட்டுவளங்களை பாதுகாக்க முடியும்.

''டிம்கோ'' அடுப்புக்களும் மரக்கரி பாவனையும் பற்றிய இலவச செயல்முறை விளக்கம் இம்மாதம் 16-ந் திகதி ஞாயிறு காலை 10-00 மணிக்கு யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கில பாடசாலையில் நடைபெறும். அனைவரும் வருகை தந்து பயன் பெறவும். விற்பனை 17-ந் திகதிமுதல் ஆரம்பமாகும்.

ஏக விநியோகஸ்தர்கள் :

## யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் (லிமிட்.)

420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன் : 438

இது அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி.

7359


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நுண்கலைகளை வளர்க்க உதவ வேண்டும்!"

## பாலமுரளிகிருஷ்ணு கருத்து

(யாழ்ப்பாணம்)

"முப்பத்தைந்து லட்சரூபா செலவில் இலங்கை இளங் கலைஞர் மன்றம், நிறுவவிருக்கும் கலாசார மண்டபத்தின் நிர்மாண வேலைகள் விரைவில் பூர்த்தியாகும் என நான் திடமாக நம்புகிறேன். இம்மண்டபத்தின் திறப்பு விழாவிலும் நான் கலந்து கொள்ளவிருக்கின்றேன்".

இவ்வாறு நேற்றுக்காலை, இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் கலாசார மண்டபத்திற்கு அடிக்கல்லை நாட்டி வைத்து உரையாற்றிய ஆந்திரா அரசின் ஆஸ்தான கவிஞரும், இசைமேதையுமான டாக்டர் பாலமுரளி கிருஷ்ணு கூறினர்.

விழாவிற்கு சங்கத்தலைவர் பொன். சுந்தரலிங்கம்தலைமை தாங்கினர். திரு பாலமுரளி கிருஷ்ணு தொடர்ந்து உரையாற்றுகையில் "புதிதாக நிறுவப்படவிருக்கும் மண்டபம். நுண்கலைகளை வளர்க்கவும். இசைக்கலையில் ஆர்வமுள்ள நல்லறிஞர்களை தோற்றுவிக்கவும் பயன் படவேண்டும். அப்போதுதான், இம்மண்டபத்தின் பயனை நாம் அடையமுடியும்" என்றூர்.

நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்தரம் பேசுகையில் "உலகின் சகல நாடுகளிலும் நுண்கலைகளை வளர்ப்பதற்கு அரசு போதிய ஊக்கம் கொடுத்து வருகின்றது. பல நாடுகளில் கலைத்துறையில் பிரபல்யமானவர்கள் அரசைக்கூடக் கைப்பற்றியுள்ளார்கள். அண்மையில் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாக ஒரு நடிகர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். எமது கலைஞர்களுக்கு இந்தியாவில் நல்ல எதிர்காலத்தை அங்குள்ள இளைஞர்கள் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்" என்றூர்.

இவ்வைபவத்தில் சர்வமதத் தலைவர்கள் உட்படப் பலர் உரையாற்றினர். (கு)

## கல்வி வள நிலையத்துக்கு நூல் அன்பளிப்பு

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் அமைந்துள்ள காங்கேசன்துறைத் தொகுதிக்கான கல்வி வள நிலையத்திற்கு அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பானிய தூதரகங்களிடமிருந்து நூல்கள், சஞ்சிகைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

காங்கேசன்துறைத் தொகுதி பாடசாலை மாணவர்களது கல்வி விருத்திக்கு உதவுமுகமாக அமைக்கப்பட்ட இந்நிலையத்திற்கு இவ்வாருன உதவிகளை வழங்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று மேற்படி தூதரகங்கள் இவற்றை வழங்கியுள்ளன. கனேடிய தூதரகம் தட்டெழுத்து இயந்திரமொன்றை வழங்க முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மன்னூரில் நகை திருட்டு: நாவலப்பிட்டியில் மீட்பு

(மன்னூர்)

மன்னூர் உயிலங்குளப் பகுதியில் களவாடப்பட்ட நகைகளை மன்னூர்ப் பொலிசார் நாவலப்பிட்டியில் வைத்து மீட்டனர். உயிலங்குளம் 10ம் கட்டையில் உள்ள வீடொன்றில் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் களவாடப்பட்டன. இக்களவு சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் மன்னூர்ப் பொலிசார் ஒருவரைக் கைதுசெய்து விசாரணை நடத்தினர்.

சந்தேகநபரின் வாக்குமூலத்தைக்கொண்டு நாவலப்பிட்டிக்குச் சென்ற மன்னூர்ப் பொலிஸ் சார்ஜன்ட் துரைராசா, பொலிஸ் கான்ஸ்டபிள் ஜனுப். யூசுப் ஆகியோர் நாவலப்பிட்டியில்வைத்துக் களவாடப்பட்ட நகைகளை உருக்கிய நிலையில் கைப்பற்றினர்.

அத்துடன் இத்திருட்டுச் சம்பந்தமாக மேலும் ஒரு சந்தேக நபரையும் கைதுசெய்தனர். (அ)

## "மாணவர்கள் கற்றகல்லூரிக்கு நற்பெயரீட்ட வேண்டும்"

(டலாலி)

"மாணவர்கள் உயர் கல்வி கற்கச் செல்லும் இடங்களில் அங்கு நடந்துகொள்ளும் நல்ல நடத்தையின் மூலம் தாங்கள் கல்விகற்ற பாடசாலையின் பெயரைக் காப்பாற்றிக் கொள்வதுடன், ஏனையோருக்கும் முன்மாதிரியாகவும் நடந்து கொள்ளவேண்டும். பெரிய கல்லூரிகளில் நடைபெறும் இவ் விருந்து வைபவம் ஒன்றை முதன்முதலில் சிறிய பாடசாலை ஒன்றில் செயற்படுத்தியுள்ள இப்பாடசாலை அதிபர் பாராட்டுக்குரியவர்."

ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாடசாலையில் நடைபெற்ற வருடாந்த மதியபோசன வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பங்குக்குரு வண. என். சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினர்.

ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த மதிய போசன வைபவம் அதிபர் திரு ஏ நவரத்தினம் தலைமையில் நடைபெற்றது. அதிபர் தனது தலைமை உரையில் "இவ்விருந்து வைபவத்தின் மூலம் மாணவர்களாக வெளியேறுபவர்கள் இப்பாடசாலையுடன் உள்ள தொடர்பை மேலும் கூட்டுவதாக இவ்வைபவம் அமைந்துள்ளது. மிகவும் மாறுபட்ட சூழலில் கல்வி கற்கப்போகும் நீங்கள் பலவிதமான இடர், சோதனைகள் உண்டாகும்போது அச் சூழலுக்குத் தக்கதாக நீங்கள் மாறவேண்டும் என்றும் அறிவுரை கூறினர். (ஈ)

## நிர்வாகிகள்

(பலாலி)

யாழ்ப்பாண பல்கலைக்கழக விளையாட்டுச் சங்கத்தின் நடப்புவருட உத்தியோகத்தர் தெரிவு அண்மையில் நடைபெற்றது. இச்சங்கத்தின் பொறுப்பாளர்களான உடற்கல்வி போதனுசிரியர்கள் திரு. எம். பத்மநாதன், செல்வி பீ. சிவஞானம் ஆகியோரது ஆலோசனையின் பேரில் இவ் உத்தியோகத்தர் தெரிவு இடம் பெற்றது.

உடற்கல்வித்துறையின் விளையாட்டுச்சங்க தலைவராக திரு. எஸ். உதாகரனும், செயலாளராக திரு. ஏ. கெங்கேஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டனர். பின்வருவோர் ஏனைய உத்தியோகத்தர்களாக தெரிவானுர்கள். உப-தலைவர்: செல்வி காஞ்சனு கணேசன், உப-செயலாளர்: சிவானி நல்லையா, உதவி தனுதிகாரி: கே. கே. அருள்வேல், பத்திராதிபர்: ஜீ. விக்கினராசா, திருபர்: வீ. சுந்தரலிங்கம், உதைபந்தாட்ட தலைவர்: ஏ. கெங்கேஸ்வரன், உப-தலைவர்: எஸ். அன்ரனி, கூடைப்பந்தாட்ட தலைவர்: எவ். என். சவரிமுத்து. உப-தலைவர்: கே. இரத்தின ஜெயம், கொக்கி தலைவர்: எஸ். சிவனேஸ்வரன், கரபந்தாட்டத் தலைவர்: வீ. சுந்தரலிங்கம், உப-தலைவர்: எம். எஸ். ஜபாகிர், மெய்வல்லுனர் போட்டி தலைவர்: எஸ். கந்தசாமி (ஆண்கள்), கிறிக்கெற் உப-தலைவர்: கே. கே. அருள்வேல், பற்மின்ரன் ஆண்கள்: எஸ். சுதாகரன், உப-தலைவர்: ஜீ. விக்கினராசா, பற்மின்ரன் பெண்கள் தலைவி: காஞ்சனு கணேசன், உப-தலைவி: சர்சலா நவரத்தினம் ரேபிள் ரெனிஸ் ஆண்கள் தலைவர்: எஸ். எம். மூர்த்தி, உப-தலைவர்: எம். ரி. சியாட் முகமட், ரேபிள் ரெனிஸ் பெண்கள் தலைவி: எஸ். சிறீரமணி, உப-தலைவி: கே. தேவிகா, வலைப்பந்து தலைவி: பீ. அல்மீனு, உப-தலைவி: ஏ. பொலீன், கூடைப்பந்து தலைவி: சிவானி நல்லையா, உப-தலைவி: எஸ். பிலோமினு பிகருடோ.

## எருக்கலம்பிட்டி கர்ப்பிணிகள் கஷ்டம் தீரும்

(மன்னூர்)

எருக்கலம்பிட்டி அரசினர் மருந்துச்சாலையில் மீண்டும் கர்ப்பிணிகள் சிகிச்சை விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

முன்பு மன்னூர் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரியினுல் மாதமிருமுறை எருக்கலம்பிட்டி அரசினர் மருந்துச்சாலையில் கர்ப்பிணிகள் சிகிச்சை நடைபெற்றுவந்தது. கடந்த சில மாதங்களாக இச் சிகிச்சை நடைபெறுவதில்லை. மன்னூர் அஸ்பத்திரிக் குழு உறுப்பினர் ஜனுப். எஸ். எம். முஸ்தபா பீ.ஏ. மேற்கொண்ட நடவடிக்கையின் பயனுகமீண்டும்கர்ப்பிணிகள் சிகிச்சை ஆரம்பிக்கப்படவுள்ளது.


For Economy Quality & Style

Vink 78

Retractable Ball Point Pens

A VELLIAMPATI PRODUCT





நம்பகமானவை ரவி பெயின்ட்/வானிஸ் பிறஷ்கள்



- நிடித்த பாவனையுடையவை
- நீண்ட தூரிகை மயிர்
- கையாள்வது சுலபம்
- குறைந்த நேரத்தில் கூடுதலான இடப்பரப்புக்கு வர்ணம் பூசுகின்றன

உற்பத்தியாளர்கள்:
ரவி இண்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட்.

ஹேலிஸ் லிமிட்டெட்.
தாபனத்தின் துணை நிறுவனம்

கிடைக்குமிடங்கள்: க. பொ. கூ. விற்பனை நிலையங்கள், இரும்பு வியாபாரிகள், முன்னணி சில்லறை வியாபாரிகள் மற்றும்
ஹேலிஸ் சில்லறை விற்பனை நிலையம், 40, கெயிசர் வீதி, புறக்கோட்டை, கொழும்பு.

ரவி பெயின்ட்/வானிஸ் பிறஷ்கள்

| புவமைப்பு இல | அளவு | பிறஷ் ஒன்றுக்கு சிபாரிசு செய்த விலை! |
|---|---|---|
| 001-1 | 1/2" | 5/75 |
| 001-2 | 3/4" | 6/75 |
| 001-3 | 1" | 8/70 |
| 001-4 | 1 1/2" | 11/70 |
| 001-5 | 2" | 18/40 |
| 001-6 | 2 1/2" | 24/00 |
| 001-7 | 3" | 28/70 |
| 001-8 | 4" | 39/00 |
| 001-9 | 5" | 46/70 |
| 001-10 | 6" | 57/25 |

Mel Ads


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
பாலும் பழமும்

லிடோ (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி
தாயே உனக்காக

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கா-ஜெய்சித்திரா
அசோகன்
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)
கதை, வசனம்—கருணாநிதி

வெற்றி முழக்கமிடும் 7-வது வாரம்
ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின்
இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
பி எஸ் வீரப்பா-நம்பியார் நடித்த
மீனவ நண்பன்

வின்ஸர் (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, & 9-30
ரவிச்சந்திரன்-எல். விஜயலக்ஷ்மி-மனோகர்
நடித்த
எதிரிகள் ஜாக்கிரதை
பயங்கர சண்டைகள் நிறைந்த படம்
(புதிய பிரதி)


## வெற்றி தோல்வி இல்லை

(சரவணை)

புங்குடுதீவு-வீராமலை இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்திற்கும் புங்குடுதீவு கண்ணகி இளைஞர் விளையாட்டுக்கழகத்திற்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டத்தில் இருதரப்பினரும் தலா ஒரு கோல் போட்டு ஆட்டத்தை வெற்றி தோல்வி இன்றி முடித்துக்கொண்டனர். ஸ்ரீ கண்ணகி அம்பாள் கோவில் வீதியில் இப்போட்டி நடைபெற்றது. (அ)

## உதைபந்தாட்டப் போட்டிகள்

(நீர்வேலி)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தால் கல்லூரிகளுக்கிடையே நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதலாம் பிரிவில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, மட்டுவில் மகாவித்தியாலயத்தை 1 : 0 கோலால் வெற்றியீட்டியது.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கும் மானிப்பாய் மெமோறியல் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற போட்டி 1 : 1 கோலால் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கும் இடைக்காடு மகாவித்தியாலயத்திற்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் 2;1 ஒரு கோலால் அத்தியார் வெற்றியீட்டியது. (அ)

## யாழ். லீக் போட்டி ஏற்பாடு

(அரியாலை)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில் உதைபந்தாட்டப்போட்டியொன்றை நடாத்த லீக்கின் தலைவர் வைத்திய கலாநிதி ஜே. பி. சி. பிலிப் ஏற்பாடு செய்து வருகிறார்,

இப்போட்டி அடுத்த வாரம் நடைபெறும் என்றும், யாழ். உதைபந்தாட்ட லீக்கின் தெரிவு கோஷ்டிக்கும், யாழ்ப்பாணதில் உதைபந்தாட்டப் போட்டியில் முன்னணியில் இருக்கும் கல்லூரிக் கோஷ்டிக்கும் இடையில் இப் போட்டி நடைபெறுமென்றும், காலநிலை நன்றாக அமைந்தால் மன்னார் மாவட்ட உதைபந்தாட்டக்கோஷ்டிக்குமிடையிலும் இந்தப்போட்டி நடைபெற ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் உதைபந்தாட்ட லீக்கின் நிர்வாகச்செவலாளர்திரு. ஜி ஜி. தேவதாஸ் நமது நிருபரிடம் தெரிவித்தார். (அ)

## யாழ். இந்து வெற்றி

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தால் கல்லூரிகளுக்கிடையே நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியின் முதலாம் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற விறுவிறுப்பான போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி 2—1 கோல்களால் வெற்றி ஈட்டியது.

ஒஸ்மானியாக் கல்லூரி ஆரம்பம் முதல் இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக விளையாடிய போதிலும் யாழ். இந்துக்கல்லூரி அடுத்தடுத்து இரண்டு கோல்களை செல்வன் சுபேந்திரன் மூலமாகவும் சபேசன் மூலமாகவும் போட்டு வெற்றியைத் தமதாக்கிக்கொண்டனர். ஒஸ்மானியாக் கல்லூரி சார்பில் தலைவர் கிறிஸ்டி சிறப்பாக விளையாடினார். திரு. நாமணி மத்தியஸ்தம் வகித்தார். (அ)

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 30ம் திகதி

சனிக்கிழமை

(15-11-80)

மேடம். குறைகேட்க நேரிடும், கடமையில் தடைகள் தோன்றும், நஷ்டத்திற்கும் இடமுண்டு, உடல் நலிவு தோன்றும். பிணிக்கு இடம் கொடுக்காது நடக்கவும்.

இடபம்; கல்வித்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும், வாகனச் சொந்தக்காரர்களுக்கு நல்லநாள். சிலருக்குத் தாய்வழியால் தனமுஞ்சேரும்.

மிதுனம்: வசதிகள் பெருகும், வாழ்க்கையும் வளம் நிறைந்ததாகக் காணப்படும், தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும். இன்று சுபநாள்.

கடகம்: இதயம் எரியலையாகும், எதிரிகள் தாக்குவார்கள், ஏமாற்றத்திற்கும் இடமுண்டு, அநாகபேசசைத் தவிாத்துக் கொள்வது நன்று.

சிங்கம்: களஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு, காதலர்கள் வாழ்க்கையில் தித்திப்பான சம்பவங்கள் இடம்பெறும், புத்திரவழியால்மகிழ்ச்சியும் உண்டு.

கன்னி: விஷப்பரீட்சையின் மூலம் விபரீதங்கள்நிசழலாம், மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்கநேரிடும், இன்று சும்மா இருப்பதேசுகம்.

துலாம்: நீண்டநாள் கனவு இன்று நனவாகும், பெரியவர்கள் உதவிக்கு வருவார்கள், புண்ணிய விருப்பு மேலிடும், முயற்சியால் முன்னேற்றம் உண்டு.

விருச்சிகம்: கடமையில் அதிக ஆர்வம்பிறக்கும், எதையும் துரிதமாகச் செய்யின் வெற்றி காண்பீர்கள், சிலருக்கு நன்மையான இடமாற்றமும் ஏற்படலாம்.

தனுசு: புதியதொழில்மூலம் இலாபம் கிடைக்கும், புத்திரர்களுடைய செல்வாக்குப் பெருகும், புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும், பூமியால் முன்னேற்றமும் உண்டு.

மகரம்: அற்ப விடயத்திற்குக் கூட ஆத்திரப்படுவீர்கள், எதிர்பாராதவகையில் பொருள் விரயமாகும், தொழில்துறையில் மனக்கசப்புகள் தோன்றும், அதிக சிந்தனைக்கு இடமளிக்காது இருக்கவும்.

கும்பம்; எக்கருமத்தையும் எண்ணித்துணிக, அவசரப் போக்கினால் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும், வணிகர்கள் அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும்.

மீனம்: வார்த்தை ஜாலம் செய்வதன்மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள், பொருள் வரவிற்கும் இடமுண்டு, மாணவர்க்கு கல்வியால் பெருமை வந்துசேரும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


யாழ். மனோஹரா வெண் திரையில்
காட்சிநேரங்கள் குறிப்பிட முடியாமைக்கு வருந்துகிறோம்
மூன்று மணித்தியாலங்கள் அமெரிக்காவைச் சுற்றி
வலம்வருவதற்கு ரசிகர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!



மக்கள் கலைஞர்
ஜெய்சங்கர்
சீமா
புன்னகை அரசி
கே. ஆர். விஜயா
நாட்டியப் பேரொளி
பத்மினி
வி. கே. ராமசாமி,
மனோரமா,
விதுபாலா,
ரீனு
அமெரிக்க நடிகர்கள்
ஜோ ஆலபரட் மார்ஷல்
மற்றும் பலர்
ஜொலிக்கும
ஒரே வானம் ஒரே பூமி
(வண்ணக்கலர்)
இந்திய திரைப்பட வரலாற்றில் இதுவரை இடம்பெற்றிராத
முதன் முதலாக முழுக்க முழுக்க அமெரிக்காவில் எடுக்கப்பட்ட
வண்ணத் திரையோவியம்.
ஆங்கிலப்படங்களை மிஞ்சும் வகையில் அமைந்த
விறுவிறுப்பான காட்சிகள் நிறைந்த படம்.
சண்டைப்பட ரசிகர்களுக்கு இனிமேல் எந்தப்படத்திலும்
காணக்கிடைக்காத பயங்கர சண்டைகள், மோட்டார் சைக்கிள்,
கார் ஓட்டங்கள் நிறைந்த படம்.

ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
Burt Reynold
Sully Field in
SMOKY AND THE BANDIT
action comedy-color

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
அந்தமான் காதலி
(கலர்-புதிய பிரதி)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி-ஞாயிறு 2-45
சிவாஜி-கே ஆர். விஜயா
கிரகப் பிரவேசம்

சாந்தி யாழ்நகர் - தினசரி 4 காட்சிகள்
இன்று 114--வது தினம்!
நீயா?
கடைசி 2 தினங்கள்
17 - 19-11-80 மூன்று முடிச்சு

கடைசி வாரம்
ராணி - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
The Eelanaadu
60 சதம்

# வெளிவாரிப் பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடக்கும்

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிக் கிளையினர் எதிர் வரும் டிசம்பர் மாதம் நடாத்தவுள்ள வெளிவாரிப் பட்டப் பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடாத்தப்படலாம் என்று தெரியவருகிறது.

யாழ். மாவட்டத்திலிருந்து 600-க்கு மேற்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றுகின்ற போதிலும் கடந்த காலங்களைப்போல யாழ். பல்கலைக்கழகமும் பரீட்சை நிலையமாக அங்கீகரிக்கப்படவில்லை.

இது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், யாழ் எம். பி. திரு வி. யோகேஸ்வரன் ஆகியோரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து அவர்கள் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் திரு. ஸ்ரான்லி கல்பகேயைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இப்பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடாத்தப்படும் என்று தெரியவருகிறது. (உ)

# 'உள்ளூராட்சிமன்ற அரசியலில் தீவிர பங்குகொண்டிருந்தார்'

## அமரர் நாகலிங்கத்திற்கு அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

'உள்ளூராட்சி மன்ற அரசியலில் தீவிர பங்குகொண்டு உழைத்தவர் அமரர் நாகலிங்கம். இவரின் காலத்தில்தான் சுன்னாகம் நவீன சந்தை, நூலகம் முதலியன ஸ்தாபிக்கப்பட்டது. இவைகள் இவருக்கு ஓர் அழியா ஞாபக சின்னங்களாக என்றும் விளங்கும். இவருக்கு நாம்செய்யும் சேவை இவர் விட்டுச்சென்ற இலட்சியங்களுக்காகப் பாடுபடுவது தான்.'

இவ்வாறு முன்னாள் செனட்டர் நாகலிங்கத்தின் மறைவு குறித்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யாழ். கிளையின் மாவட்டச் செயலாளர் திரு. எஸ், கணேசன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"தோழர் பொன். நாகலிங்கம் 1947ம் ஆண்டு முதலாவது பாராளுமன்ற தேர்தலில் சமசமாஜக்கட்சியின் சார்பில் காங்கேசந்துறை தொகுதியில் போட்டியிட்டவர். இவர் அதில் கணிசமான வாக்குகள் பெற்றிருந்தார், இதன்பின் சமசமாஜக் கட்சியின் முதவை உறுப்பினராகவும் இருந்தார். இவரின் கட்சிப்பற்று எல்லோருக்கும் ஓர் முன்மாதிரியாக இருந்தது. கட்சியின் சோதனைமிகுந்த காலங்களில் குறிப்பாகமொழிக்கொள்கைகள் பற்றி ஏற்பட்ட சர்ச்சைகளுக்கு மத்தியில் பலவிதமான எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் கட்சித் தொண்டனாக இருந்து உழைத்தவர்". (கு)

## 'நவம்' காப்பாற்றினர்!

(யாழ்ப்பாணம்)

சீனி மூடைகளை ஏற்றிக்கொண்டு சென்ற லொறி ஒன்று மண்கும்பானுக்குச் சமீபத்தில் நேற்றுக் குடைசாய்ந்தபோது சீனி மூடைக்குள் லொறியின் கிளீனர் சிக்கிக்கொண்டு உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தார். இச் சமயம் அப்பாதையில் ஊர்காவற்றுறை நீதிமன்றத்திலிருந்து வந்துகொண்டிருந்த சட்டத்தரணி திரு. வி. என். நவரத்தினமும் அவரது ஜீப் சாரதியும் நீதிமன்ற உத்தியோகத்தர் ஒருவரும் கிளீனரைச் சீனிமுடைகளுக்கிடையிலிருந்து மீட்பதில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் நீதிமன்றத்தில் திரு. நவரத்தினத்துடன் எதிர்த்து வாதம் புரிந்த சட்டத்தரணி திரு. தம்பிரத்தினமும் அங்கு வந்து சேர்ந்து இவர்களுடன் இணைந்து கிளீனரைக் காப்பாற்றுவதில் ஈடுபட்டார். கிளீனர் உயிர் தப்பினர். மழையில் எத்தனை அந்தர் சீனி கரைந்ததோ?


# மரண அறிவித்தல்

## திரு. சரவணமுத்து நவரத்தினம்

மூளாய் சரவணமுத்து நவரத்தினம் (இளைப்பாறிய வித்திபாதரிசியும், புறூணையில் விரிவுரையாளராக இருந்து இளைப்பாறியவரும்) காலமானார். இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், இராசதுரை, Dr. அப்புத்துரை (மலேசியா), திருமதி இராசதுரை (வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்புச்சகோதரரும், சிதம்பரநாதன் U. K, Dr. ஸ்ரீஸ்கந்தராசா U. K, தெய்வசரோஜா U. K, Dr. பேபி சரோஜா (சவுதி அரேபியா), முருகதாஸ் U. K, சண்முகதாஸ் U. K, சிவக்குமார், செல்வகுமார் (யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும், Dr. ஆனந்தகோபன் U. K, ரவீந்திரன் (சவுதி அரேபியா), இராஜேஸ்வரி, கௌரி ஆகியோரின் மாமனருமாவார்.

ஈமக்கிரியைகள் 15-ம் திகதி சனிக்கிழமை 11 மணிக்கு மூளாயில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

7361


# சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

809-வது இலக்க தேசிய லொத்தர் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு:

**01 G 0192**

ரூ. 1,00,000/-

இரண்டாம் பரிசு:

ரூ. 40,000/-

**26 G 0595**

மூன்றாம் பரிசு:

**13 R 0844**

ரூ. 10,000/-

தலாரூபா1565/-40கொண்ட 100 ஆறுதல் பரிசுகள்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | A | 0275 | 09 | A | 0044 |
| 13 | A | 0044 | 16 | A | 0474 |
| 33 | A | 0294 | 03 | B | 0392 |
| 10 | B | 0013 | 52 | B | 0705 |
| 01 | C | 0111 | 03 | C | 0137 |
| 05 | C | 0617 | 11 | C | 0772 |
| 19 | C | 0441 | 24 | C | 0693 |
| 27 | C | 0617 | 28 | C | 0117 |
| 01 | D | 0505 | 08 | D | 0827 |
| 16 | D | 0553 | 17 | D | 0542 |
| 17 | D | 0638 | 20 | D | 0778 |
| 22 | D | 0517 | 03 | E | 0241 |
| 04 | E | 0132 | 15 | E | 0773 |
| 17 | E | 0547 | 28 | E | 0180 |
| 15 | F | 0807 | 23 | G | 0343 |
| 32 | G | 0403 | 33 | G | 0185 |
| 13 | G | 0898 | 01 | H | 0341 |
| 07 | H | 0139 | 17 | H | 0546 |
| 20 | H | 0336 | 07 | J | 0684 |
| 12 | J | 0470 | 23 | J | 0236 |
| 23 | J | 0966 | 25 | J | 0221 |
| 26 | J | 0332 | 28 | J | 0314 |
| 31 | J | 0325 | 31 | J | 0562 |
| 33 | J | 0907 | 09 | K | 0973 |
| 20 | K | 0006 | 25 | K | 0425 |
| 27 | K | 0155 | 29 | K | 0044 |
| 08 | L | 0101 | 17 | L | 0903 |
| 20 | L | 0168 | 08 | M | 0291 |
| 03 | M | 0693 | 23 | M | 0179 |
| 31 | M | 0206 | 31 | M | 0225 |
| 05 | N | 0417 | 15 | N | 0212 |
| 21 | N | 0403 | 25 | N | 0503 |
| 08 | O | 0362 | 03 | O | 0369 |
| 11 | O | 0862 | 12 | O | 0567 |
| 12 | O | 0811 | 19 | O | 0899 |
| 20 | O | 0061 | 2 | O | 0904 |
| 20 | P | 0382 | 28 | P | 0710 |
| 27 | Q | 0172 | 02 | R | 0857 |
| 18 | R | 0530 | 21 | R | 0008 |
| 25 | R | 0796 | 28 | R | 0925 |
| 17 | S | 0804 | 22 | S | 0206 |
| 02 | T | 0895 | 07 | T | 0802 |
| 09 | T | 0731 | 24 | T | 0121 |
| 02 | U | 0274 | 21 | U | 0175 |
| 27 | U | 0325 | 05 | V | 0750 |
| 24 | W | 0985 | 33 | W | 0522 |
| 16 | X | 0831 | 18 | X | 0100 |
| 25 | X | 0672 | 31 | X | 0072 |
| 08 | Y | 0812 | 27 | Y | 0765 |
| 02 | Z | 0518 | 09 | Z | 0125 |

(இவை யாவும் உறுதிப் படுத்தப்பட வேண்டும்.)

## தமிழர் கரு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இந்த அரசாங்கம் இந்த வழியில்தான் முயற்சி செய்கிறது. இவ்வாறு போனால் ஈரானிய ஷாவுக்கு நேர்ந்த கதி தான் இந்த அரசுக்கும் ஏற்படும். இங்குள்ள அடிப்படை நிலைமை இது தான் தமிழ் மக்களின் பிரச்னைகளை இந்த முறையில் தீர்க்க முடியாது என்றார்.

### தமிழ் ஈழம் முற்றான முடிவு

"1977ம் ஆண்டு தமிழ் ஈழத்தை மீளவும் நிறுவும்படியான ஒரு ஆணையைத் தமிழ் மக்கள் எமக்குத் தந்தார்கள். இது உறுதியானதும் முற்றானதுமான ஒரு முடிவு. இதில் சந்தேகமானால் தமிழ்மக்கள் மத்தியில் கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்திப் பாருங்கள். நீங்கள் ஸ்ரீலங்காவுடன் தமிழ் ஈழத்தையும் திருகோணமலையையும் இணைத்து ஒரு நாடாகக் காட்டி வெளிநாட்டு உதவி பெற முயற்சிசெய்கிறீர்கள். இக்கொள்கையினால் கோஷலி[illegible]

# பாராளுமன்றத்தில்-...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரணை செய்யக்கூடாதென்றும் அந்த மனுவில் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

"இம்மனுமீது விசாரணை செய்த உயர்நீதிமன்றம், இவர்கள் செய்த பாதகங்களை ராணுவ நீதிமன்றம்தான் விசாரிக்கவேண்டுமென்றுதீர்ப்பளித்தது. இத்தீர்ப்பைக் கேட்டு விட்டு வந்தநான் 'கன்ரீனுக்குள் இருந்தபோது, நல்லூர் எம். பி. சிவசிதம்பரம் எனது தோளில் தட்டினார். 'நானும் நீங்களும் நீண்டகால சட்டத்தரணிகள். அந்தக் காலத்தில் பெண்ஜூரர்கள் நியமிக்கப்படவில்லை. பெண்களின் பெலவீனத்தை நாம் அறிந்தவர்கள். எனவே மரணதண்டனை வழங்குவதை இனிநீக்க வேண்டும். இதற்கான பிரேரணை ஒன்றை பாராளுமன்றத்தில் கொண்டுவர இருக்கிறேன்" என்று அவர் கூறினார்.

"பாராளுமன்றத்துக்கு வரவில்லையா என்று நான் அவரைக் கேட்டேன். நீதிமன்றத்தில் தனக்கு வரவேண்டிய கட்டணங்களை வாங்கியபின் மாலை வருவதாகக் கூறினார்.

"பின்னர் நான் இரண்டு பேரது' குற்றத்திற்காகவும் சிலை வைப்பதென்றுதீர்மானித்தேன். சிலையை வீதியருகே வைத்தால் கட்டிடங்களைஇடிப்பதுபோன்று நகர அபிவிருத்தி அதிகாரசபையினர் இந்தச் சிலைகளையும் இடித்துவிடுவார்கள் என்பதால் வீதிக்குச் சற்றுத்தூரத்தில் அமைக்க முடிவு செய்தேன்.

"திலகரத்தினாவின் சிலைக்குக் கீழ் 70 ரூபாவழங்கியதற்காக நன்றி மறவாத மக்கள் என்று சிங்களத்தில் எழுதப்பட்டிருக்கிறது. சண்முகத்தின் சிலைக்குக் கீழ் சிங்களத்தில் எழுதினால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கொதிப்படைவார்கள் என்பதால் 'பாளி' மொழியில் எழுதப்பட்டிருந்தது. சிங்களத்தில் எழுதாமல் வேறு எந்த மொழியில் எழுதினாலும் அவர்கள்கொதிப்படையமாட்டார்கள்.

"சிலையைத் திறப்பதற்கு நிதி அமைச்சர் வந்தார். இலவசமாக அங்கிருந்தவர்களுக்கு டீ வழங்கினர்: சண்முகத்தின் சிலையைப் பார்த்துவிட்டு அதில் பாளியில் எழுதப்பட்டிருந்ததை அறிவதற்காக தேசிய சுவடிகள் திணைக்களத்திற்குப் போனேன். அங்கிருந்த அதிகாரிகள் என்னைக் கவனிக்கவில்லை. உடனே நான், கலாச்சார அமைச்சர் திரு. ஹேருள்ளேயுடன் படித்தவன் என்று அவர்களுக்கு என்னை அறிமுகப்படுத்தினேன். இருக்குமாறு கூறியவர்கள் தேநீர் தந்தார்கள். அப்போ நான்: தேயிலையை இறக்குமதி செய்யப் போவதாக அத்துலத்முதலி கூறியிருக்கிறார். அதன் பின்னர் குடிப்போம்" என்றேன்.

"அந்த பாளி மொழி வாக்கியத்தை மொழி பெயர்க்க மூன்று வருடங்கள் செல்லும் என்றவர்கள், எனக்காக 2 வருடத்தில் தருவதாகக் கூறினார்கள். இது குறித்து அறிக்கை சமர்ப்பிக்க 10 வருடங்கள் தேவை என்றனர். அதற்கிடையில் தாம் ஓய்வு பெற்று விடுவதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

"பின்னர் நான் வீடு திரும்பியதும் எனது மனைவி சொன்னாள்: பட்ஜட்டை எதிர்த்துப் பேசியதால் அமைச்சர் பதவியை நீங்கள் பறிகொடுத்தீர்கள். இதனால் எனக்குப் 'பாட்டி'களுக்குப் போகும் சந்தர்ப்பமில்லாமல் போய்விட்டதே. அந்தரங்கச் செயலாளருக்கான சம்பளமில்லாமல் செய்துவிட்டீர்கள் இப்போது சாதாரண எம். பி யின் செயலாளராக வேலையில்லாமல் சம்பளம் பெறவேண்டியுள்ளதே என்றார் இவ்வாறு திரு. ஜயவர்த்தன தாம் கண்ட கனவுபற்றி விளக்கினார். (ம-கு)

# வான் விபத்தில் குழந்தை பலி!

## அச்சுவேலியில் பரிதாபம்

(பலாலி)

வான் விபத்தொன்றில் ஒரு வயது குழந்தை பரிதாபமாக மாண்ட சம்பவம் வயாவிளானில் நிகழ்ந்துள்ளது.

நேற்று முன்தினம் அச்சுவேலியிலிருந்து பிரயாணிகளை ஏற்றி வந்த வான் பாதையை விட்டுவிலகியதால் இவ் விபத்து ஏற்பட்டது.

சூரன் போர் முடிந்து சந்நிதியிலிருந்து திரும்பிய வான் மழைகாரணமாக இவ் விபத்துக்குள்ளானதாக கூறப்பட்டது. விபத்துக்குள்ளான வானின் நான்கு சில்லுகளும் மேல் நோக்கிய நிலையில் இருந்தது. விபத்துக்குள்ளான வானில் தனது தாயுடன் பிரயாணம் செய்த குழந்தை வானில் அகப்பட்டு தலை நசுங்கியதுடன், ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானது. பயணிகள் பலர் சிறு காயங்களுடன் உயிர் தப்பினர். வான் சாரதி ஜெயக்கொடி பொலிஸ் பாதுகாப்பில்வைக்கப்பட்டதுடன் காங்கேசன்துறைப் பொலிசார் இவ்விபத்துக்குறித்து விசாரணை செய்துவருகின்றனர்.

## தனிச்சிங்கள...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தெனத்தெரியாது அங்கலாய்க்கின்றார்கள்.

இதுவரை காலமும் எல்லாப் படிவங்களுக்கும் தமிழ்மொழி பெயர்ப்பை அனுப்பிய கல்வி அமைச்சு இதுவிஷயத்தில் தமிழ்மொழிபெயர்ப்பை அனுப்பாததையிட்டு இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவத்திடம் முறையிட்டுள்ளார்களெனத் தெரியவருகிறது. (அ)

சத்திலிருந்து நீங்கள் முதலாளித்துவத்துக்கு மாறிக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் 500 ரூபாய்க்கு சேட்வாங்கி சொகுசாக உடுத்திருக்கும் போது 5 ரூபாய்க்கு உணவு வாங்கமுடியாத நிலையில் ஏழைகள் இருக்கிறார்கள் என்றார் திரு. கதிரவேலுப்பிள்ளை.

"எங்களைத் தனியாக சுதந்திரமாக விட்டு விடுங்கள். நாம் இரு நாடுகளாக நட்புறவுடன் வாழமுடியும்" என்றார் (ம

## மின்வெட்டு!

சென்னை, நவ. 14

தமிழ்நாட்டில் அடுத்தாண்டு ஜூன் மாதம்வரை மின்வெட்டு அமுல் செய்யப்படுமென்று தமிழ்நாடு மின்சாரத் துறையமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாப[illegible]ல் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் நவம்பர் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka under No. QJ 8948/78 The Eelanaadu P. B. No 49.
Grams Eelanaadu, Phone 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org